**13.03.2023**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.7/2015

**வ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | சாதி | |
| த/பெ | கண்ணுசாமி | மதம் | |
| கிராமம் | குடமுருத்தி | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 63/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிருபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. வழக்கறிஞர் படித்துக்காட்டினார் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் 7.12.2012 தேதியிட்ட ராமலிங்கம் வாதிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாசா.ஆ.2ல் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணைக்காக**

7.12.2012 அன்று ராமலிங்கம் எத்தனை தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதினார் என்றால் 2 எழுதினார். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் ரமணிக்கும், அவரது மற்றொரு மகளான ஆஜர் வாதிக்கும் எழுதி வைத்தார். வாதியின் பெயர் தற்போது தெரியவில்லை. ரமணிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும் நான் தான் சாட்சி கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ரமணி பெயரிலான தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது அந்த தானசெட்டில்மெண்ட் சான்றிட்ட ஆவணம் பி.வா.சாஆ.1. அதே தேதியில் ராமலிங்கம் அவரது

இறந்துபோன மகள் ரேவதியின் மகன்கள் அஜித்குமார், விசுவநாத் ஆகியோருக்கும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி தானசெட்டில்மெண்டில் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சாஆ.2. யார் யாருக்கு என்னென்ன சொத்து எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது. ராமலிங்கத்திற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. ராமலிங்கம் வைத்திருந்த சொத்துக்கள் அவரது பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு ராமலிங்கம் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணப்படி சொத்தை வாதி அனுபவிக்கவில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வரவில்லை என்றும், ராமலீங்கம் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பிற்பாடு ரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது.